# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2135/41 - 2019 අගෝස්තු මස 06 වැනි අඟහරුවාදා - 2019.08.06

*2135/41 ஆம் இலக்கம் – 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 06 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

#### மத்திய மாகாண மாகாண சபை

மத்திய மாகாண ஆளுநர் மைத்திரி குணரத்ன ஆகிய என்னால் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (பிரித்தெடுக்கப்பட்ட விதிமுறைகள்) சட்டத்தின் 2(1) (அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கத்தக்க 225 ஆவது அத்தியாயமான நகர சபை கட்டளைச் சட்டத்தின் 193(உஉ) பிரிவின் ஊடாக எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள நகர சபைகளின் உறுப்பினர்களுக்கான எரிபொருள் கொடுப்பனவினை வழங்குவதற்கு உரிய விதிமுறைகளை இத்தால் வெளியிடுகின்றது. இவ்விதிமுறைகள் 2019.03.15 அன்றைய தினத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

மைத்திரி குணரத்ன,
மத்திய மாகாண ஆளுநர்,
மத்திய மாகாணம்.

ஆளுநர் செயலாளர் அலுவலகம்,
மத்திய மாகாணம்,
2019, மாச்சு 15.

**விதிமுறைகள்**

1. இந்த விதிமுறைகள் நகர சபையின் உறுப்பினர்களுக்கான எரிபொருள் கொடுப்பனவு வழங்குவதற்கான விதிமுறைகள் என அறியப்படும்.
2. இந்தக் கொடுப்பனவுகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு இலக்கம் 1914/40 மற்றும் 2015.05.15 ஆந் திகதியிட்ட அதிவிசேட வர்த்தமானியின் ஊடாக வெளியிடப்பட்ட கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாகும். நகர சபை உறுப்பினர்களுக்கு கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு எரிபொருள் கொடுப்பனவு அவ்வந்த நகர சபை நிதி ஒதுக்கீட்டின் மூலமாக செலுத்தப்பட வேண்டும்.


1A - PG 4611 — 07 (2019/08)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

மத்திய மாகாண நகர சபை உறுப்பினர்களுக்கு மாதாந்தம் ரூ. 2500.00 எரிபொருள் கொடுப்பனவாகச் செலுத்துதல்

* இந்தக் கொடுப்பனவு நகர சபை உறுப்பினர்களுக்கு மட்டுமே உரித்தானதாகும்.

* நகர சபை தலைவர், உப தலைவர் தற்போது எரிபொருள் கொடுப்பனவினைப் பெறாவிட்டால் இக்கொடுப்பனவினைப் பெற்றுக் கொள்ள முடியும். ஒரே விடயம் சம்பந்தமாக ஒருவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ள முடியாது.

* மாநகர சபைகளுக்கு இது உரித்தானதல்ல.

* ஒவ்வொரு உறுப்பினருக்குமான கொடுப்பனவு ஆகக் கூடியது ரூ. 2500.00 ஆகும். தம்மிடம் மோட்டார் சைக்கிள்/முச்சக்கர வண்டி/ வேறு மோட்டார் வண்டிகள் இல்லாதபோது வேறு வாகனங்களைப் பாவிக்க முடிவதுடன் அதற்கான பில் அல்லது கடிதம் ஒப்படைக்கப்பட வேண்டும். குறித்த வாகன போக்குவரத்து அட்டவணையினையயும் ஒப்படைக்க வேண்டும்.

* சபையின் உத்தியோகபூர்வ பயணங்கள் அல்லது அபிவிருத்தித் திட்டங்களினை மேற்பார்வை செய்வதற்கான பயணங்கள் குறித்த விபரங்கள் ஒப்படைக்கப்பட வேண்டும்.

8 - 800

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.